2024 பிப்ரவரி 15]

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்பமை பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னால் முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் தொடங்கி, ஆதி திராவிட, பழங்குடியின சமூகத்தைச் சார்ந்த மக்களுடைய வீடுகள் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளன என்பதை மாண்பமை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கொண்டு வந்தோம். சற்றேறக்குறைய ஒன்றரை இலட்சத்திற்கும் மேலான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான வீடுகள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கான வீடுகள், சற்றேறக்குறைய ஒரு இலட்சம் வீடுகள் அவை அனைத்தும் பழுது பார்க்கப்படும் என்கிற ஆகச்சிறந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிற மாண்பமை முதல்வர் அவர்களின் கருணை உள்ளத்திற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே மனம் நிறைந்த நன்றியைப் பதிவு செய்து, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

5. பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் இரண்டு நாட்களாக 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி வருகிறார்கள். வேப்பேரி காவல் ஆணையர் அலுவலகம் முன்பு நேற்றையதினம் போராடினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பெற்றார்கள் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். இன்றையதினம் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றையதினமும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கோரிக்கைகளைக் கனிவோடு பரிசீலித்து, தமிழக அரசின் துறைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 4 சதவிகித இட ஒதுக்கீட்டில், 1 சதவிகிதம் பார்வையற்றோருக்கு*

ஒதுக்க வேண்டும். அதை அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பார்வையற்றவர்களுடைய அந்தப் போராட்டத்தைப் பற்றி இங்கு எடுத்துக்கூறினார்கள். அவர்களின் ஆசிரியர் பணிக்கான போராட்டம் கிட்டத்தட்ட 2012 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வருகிறது. அதை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களும், அந்த நேரத்தில் அவர்களுக்கு ஆதரவு அளித்தார்கள். தொடர்ச்சியாக நம்முடைய கவனத்திலே அது இருந்து வருகிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, தேர்வின்றி ஆசிரியர் நியமனத்திற்கு சாத்தியம் இல்லாதபோதிலும், இந்த அரசு அவர்களின் நலனுக்காகப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். பார்வைத் திறன் குன்றிய மாணவர்களுக்காகக் கல்வி உதவித் தொகை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டு, 22,300 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். அதுபோல, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்வசம் வைத்துக்கொண்டு, அத்துறைக்கான நிதி ஒதுக்கீடு ஆண்டுதோறும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.667 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. கடந்த நிதியாண்டில் 2023–2024–ல் அத்தொகை ரூ.1,106 கோடியாக அதிகரிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 541 கோடி ரூபாய் கூடுதலாக இத்துறைக்கு மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக ஒதுக்கப்பட்டது. அதுபோல, கடும் ஊனமுற்றோர், பார்வைத் திறனற்றோர் மற்றும் வருவாய்த் துறைமூலம் பயனடையும் 7,43,381 நபர்களுக்கும், அத்துணை மாற்றுத் திறனாளிகளுக்கும் மாதாந்திர பராமரிப்புத் தொகை 500 ரூபாய் உயர்த்தி வழங்கப்பட்டது. அதுபோல, மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்கும் கடந்த ஆண்டு 2 கோடி ரூபாய் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஐந்தரை கோடி ரூபாய்க்கு இன்றுவரை இந்த 33 மாதங்களுக்குக் கூடுதலாக அவர்கள் பயனடைந்து வருகிறார்கள். அத்துணை உதவிகளும் இரண்டு மடங்காக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய விபத்து நிவாரணத் தொகை, மருத்துவ உதவித்*

2024 பிப்ரவரி 15] [திருமதி பி. கீதா ஜீவன்]

தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை என்று அத்துணை உதவித்தொகைகளும் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றன.

நண்பகல் 12-00

அதேபோல, நம்முடைய மாணவர்கள், பார்வைக் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளி மாணவர்கள் 1,000 நபர்களுக்கு நவீன வாசிக்கும் கருவி, தலா 14,000 ரூபாய் மதிப்பீட்டில் வழங்கும் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டு, தொடர்ச்சியாக பார்வையற்ற மாற்றுத் திறனுள்ள மாணவர்களின் நலனுக்காக வழங்கப்பட்டு வருகின்றது.

அதுபோல், இல்லங்கள் மற்றும் சிறப்புப் பள்ளிகளில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான உணவீட்டுச் செலவினத்தை 900 ரூபாயிலிருந்து இப்போது 1,200 ரூபாயாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

அதுபோல, ஆவின் பாலகம் அமைத்திடவும், உள்ளாட்சி மன்றங்களில் உள்ள வணிக வளாகங்களில் 5 சதவிகித இட ஒதுக்கீடு மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம், அவர்களின் வாழ்வாதாரத்திற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள் என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள அத்தனை மாற்றுத் திறனாளிகளுக்கும் முன்னுரிமை வழங்கி வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற ஒரு சிறப்பு உத்தரவு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியதற்கேற்ப இதுவரைக்கும் 2,751 பேருக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோல, ஊரக வளர்ச்சித் துறை மூலமும், நம்முடைய நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமும் அவர்களுக்குக் குடியிருப்பிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. அதில் இதுவரைக்கும் 1,614 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளார்கள்.

[திருமதி பி. கீதா ஜீவன்] [2024 பிப்ரவரி 15

இவ்வாறு மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் ஏற்றம் காணச் செய்ய வேண்டும், அவர்களைக் கை தூக்கி விட வேண்டும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறார்கள். அவர்களுடைய போராட்டத்திற்கான கோரிக்கைகளையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்— விவாதத்திற்கான பதிலுரை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(திருத்தங்கள் வலியுறுத்தப் பெறவில்லை.)

மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தமிழ்நாடு அரசால் ஏற்பளிக்கப்பட்டு, பேரவைக்கு வழங்கப்பட்ட ஆளுநர் உரையில், 46 பக்கங்களில் முதல் பக்கத்தினை மட்டும் படித்தும் மற்றும் சில பகுதிகளைத் தானாகவே இணைத்தும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றியமைக்கு இப்பேரவை தனது வருத்தத்தைப் பதிவு செய்கிறது.

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12 ஆம் நாளன்று பேரவையில் பதிவு செய்யப்பட்ட மாண்புமிகு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு இப்பேரவை உறுப்பினர்கள் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்களால் 13–2–2024 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)